# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 27.06.2024

அ.வ.எண்.37/2018

வா.சா.1– மெய்யப்பன், த/பெ.மலையாண்டிகோனார்

வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

1. நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக படிக்கத்தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் விபரங்களை படித்துப் பார்த்தேன். வழக்குரையில் எத்தனை சொத்துக்கள் காட்டியுள்ளேன் என்றால் 5 சொத்து விபரங்கள் காட்டியுள்ளேன். தாவா 1, 2 அயிட்டச் சொத்துக்கள் வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி கிரையம் வாங்கிய சொத்துக்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3 வது அயிட்ட சொத்தானது பூர்வீக சொத்து என்றும், அது நடைபாதை சொத்து என்றும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்திற்கும், பிரதிவாதிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். 1 வது அயிட்ட சொத்தானது கிழமேல் நடைபாதை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 1 வது அயிட்ட நடைபாதை சொத்தில் பிரதிவாதி எதுவும் பிரச்சனை செய்ததாக நான் வழக்குரையில் எங்கும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் பிரதிவாதி 1 வது அயிட்ட சொத்தில் எனக்கு இடையூறு செய்ததாக நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. 3 வது அயிட்ட நடைபாதை சொத்தில் பிரதிவாதி எங்களுக்கு பிரச்சனை எதுவும் செய்ததாக நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும், எங்களுக்கும் 1, 3 அயிட்ட நடைபாதைகளை பொறுத்து பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரச்சனை ஏற்பட்ட ஆதிகாலம் முதல் 1, 3 அயிட்ட நடைபாதையை பொறுத்து எங்களுக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சனை கிடையாது என்றால் சரிதான். எனது வழக்குரையில் முதல் பரிகாரமாக பிராது 1, 3 அயிட்ட சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரமும், அதனை அனுசரித்து 1, 3 அயிட்ட சொத்துக்களில் வாதிகளாகிய நாங்கள் நடைபாதையாக அனுபவிப்பதை பிரதிவாதியோ, அவரது வகையறாக்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர ஏவுக்கட்டளைப் பரிகாரமும் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 1, 3 அயிட்ட நடைபாதை சொத்துக்களைப் பொறுத்து எங்களுக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சனை இல்லாதநிலையில் அதனை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அந்த இடமானது மற்ற சொத்துக்களோடு சேர்ந்து இருப்பதால் அதனையும் சேர்த்துள்ளோம். 1, 3 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். 1, 3 அயிட்டச் சொத்துக்களைப் பொறுத்து வழக்குரையில் கோரியுள்ள முதல் பரிகாரமானது பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்குமூலமும் இல்லாமல் உள்ளதால் முதல் பரிகாரம் நிராகரிக்கப்படவேண்டியது என்றால் சரிதான்.

4. 2வது அயிட்ட சொத்தில் எவ்வளவு பகுதி பிரதிவாதியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி தனியாக வலியுறுத்துக்கட்டளைப் பரிகாரம் பெற பிரித்துக் காட்டப்பட்டுள்ளதா என்றால், குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் முன்பாக சொத்துக்களை அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்க்கவில்லை. பிரதிவாதி 2வது அயிட்ட சொத்தில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்ற சரியான அளவு தெரியாது, ஆனால் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது தெரியும். அனுமானத்தின் பேரில் ஆக்கிரமிப்பு இருப்பதாக சொல்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்தபோதே ஆணையரை நியமனம் செய்ய மனுதாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

5. 2018ம் வருடம் இந்த வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். ஆணையர் எப்போது இடத்தைப் பார்வையிட்டார் என்றால் 2022ம் வருடம் பார்வையிட்டார். வழக்கு தாக்கல் செய்தபோது பிரதிவாதி கட்டிடம் கட்டிக்கொண்டிருப்பதாக சொல்லி வழக்கு போட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதி கட்டிடம் கட்டிக்கொண்டிருப்பதாக சொல்லி நான் வழக்கு போட்ட நிலையில் ஏன் நீதிமன்ற ஆணையரை உடனடியாக அழைத்துச்சென்று இடத்தைக் காட்டவில்லை என்றால் பிரதிவாதி 2 நாட்களுக்குள் கட்டிமுடித்துவிட்டார், அதனால் உடனடியாக காட்டவில்லை. 2014-ல் பிரதிவாதி இடம் வாங்கியவுடன் கட்டிடம் கட்டிவிட்டார் என்றும், நான் உடனடியாக ஆணையரை அழைத்துச்சென்று காட்டியிருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்று காலம் தாழ்த்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 2வது அயிட்டச் சொத்தைப் பொறுத்தான வழக்குமூலம் பொய்யானது என நிரூபணம் ஆகிறது என்றால் சரியல்ல.

6. எனது தந்தை மலையாண்டி கோனாருக்கு வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த கிருஷ்ணக்கோனார் மற்றும் அருணாச்சலக்கோனார் ஆகியோருக்கு அந்த சொத்து பாத்தியப்பட்டதாக காட்டக்கூடிய ஆவணம் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பழைய பட்டா இருந்தது. நான் சொல்லும் அந்த பழைய பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பழைய பட்டா. வழக்கு தாக்கல் செய்யும்போது எனது கையில் இல்லை. அதனால் தாக்கல் செய்ய இயலவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த கிருஷ்ணக்கோனார் தற்போது உயிருடன் இல்லை, அருணாச்சலக்கோனார் உயிருடன் உள்ளார். அருணாச்சலக்கோனாரை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரிக்க இயலும் என்றால் சரிதான். அவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபர்களுக்கு அந்த சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால் வா.சா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் உரிமை எதுவும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. **(சாட்சி தானாக அருணாச்சலக்கோனாருக்குத்தான் அந்த சொத்தில் உரிமை இல்லை எனக் கூறுகிறார்.)** வா.சா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட வா.சா.ஆ 2 ஆவணமானது எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 2வது அயிட்டச் சொத்திற்கு கீழ்புறம் உள்ள இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அந்த இடம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்டு நாளது தேதிவரை

அவரது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு வரும் மின் இணைப்பு ஒயர் பிரதிவாதி இடத்தின் மேலாக வருகிறது என்றால் சரியல்ல. எங்கள் இடத்தின் மேலாக வருகிறது.

8. பிரதிவாதி இடத்திற்கு மேலாக செல்லும் ஒயரை பிரதிவாதி எரித்துவிட்டதாக 2016 ம் ஆண்டில் புகார் கொடுத்தேனா என்றால் எனது இடத்திற்கு மேலாக செல்லும் ஒயரை பிரதிவாதி எரித்துவிட்டதாக புகார் கொடுத்தேன். நாளது தேதிவரை பிரதிவாதி இடத்தின் மேலாகத் தான் எங்கள் வீட்டுக்கு செல்லும் மின் இணைப்பு ஒயர் செல்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதி இடத்தின் வழியாக ஒயர் செல்வதாக நிரூபிக்கப்பட்டால் அதனை நீதிமன்றம் அகற்றச்சொன்னால் நான் அகற்றத் தயாராக உள்ளேன்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.